## இன்று பொதுக்காலம் இருபத்தேழாம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு - B

## 2021-10-03

(இன்றைய வாசகங்கள்:

தொடக்க நூலிலிருந்து வாசகம். 2:18-24,

பதிலுரைப்பாடல்: திபா. 128:1-6,

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம். 2:9-11,

மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 10: 2-16)

### திருப்பலி முன்னுரை

*உம் வாழ் நாளெல்லாம் ஆண்டவர் உமக்கு ஆசி வழங்குவாராக.*

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! தூய்மையாக்குகிறவர், தூய்மையாக்கப்படுவோர் அனைவருக்கும் உயிர்முதலான விண்ணகத் தந்தையின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று பொதுக்காலம் இருபத்தேழாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம். அன்பு எவ்வாறு, எங்கே, எப்பொழுது முழுமை பெறுகின்றது, என்பதற்கான நல்லதொரு பதிலையும், தெளிவையும் இன்றைய இறைவார்தைகள் வழியாக இறைவன் தருகின்றார். நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டுள்ளோமென்றால் கடவுள் நம்மோடு இணைந்திருப்பார்: அவரது அன்பு நம்மிடம் நிறைவு பெறும். என்னும் மாபெரும் உண்மையை யோவானின் கடிதம் நமக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. அத்தோடு குடும்ப வாழ்வின் புனிதத் தன்மை பற்றியும் சில புரிதல்கள் முன்வைக்கப்படுகின்றன. இவையனைத்தையும் நம் சிந்தையில் ஆழமாக ஏற்று இறைவன் விரும்பும் ஒரு உன்னத வாழ்வு வாழ இத்திருப்பலியில் வரங்கேட்டுச் செபிப்போம்.*

www.tamilcatholicnews.com

## ***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***ஆசீரும் அருளும் நிறைந்த அன்புத் தந்தையே இறைவா!***

*உமது பிரதி நிதிகளாக இருக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரும் மக்களுக்கு ஆறுதலாகவும், ஆசீர்வாதமாகவும், அவர்களுக்காக இறைவனிடம் பரிந்து பேசுகின்றவர்களாகவும், நல்ல வழிகாட்டிகளாகவும் இருந்து பணியாற்ற வேண்டிய பலத்தையும் உடல் நலத்தையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***மணவாழ்வின் நாயகனே. இறைவா, உம்மைப் போற்றுகிறோம்.***

*தம்பதியரின் மணவாழ்வு அன்பு மணம் வீச உம்மை மன்றாடுகிறோம். நீரே அவர்களின் கடின இதயத்தை மாற்றி, கனிவான இதயமாக மாற்றிருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக என்ற ஆசீரோடு குடும்ப உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே இறைவா!***

*எமது குடும்பங்களுக்காக உம்மிடம் வருகின்றோம். இன்றைய நாட்களில் குடும்ப உறவுக்கும், ஒற்றுமைக்கும், மகிழ்ச்சிக்கும் தடையாக இருக்கும் அனைத்துத் தீமைகளையும் உமது இரக்கத்தால் தகர்த்தெறிந்து குடும்பங்களில் அமைதியும், மகிழ்ச்சியும், ஒற்றுமையும் நிலவ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***ஒருவர் ஒருவரின் சுமைகளைத் தாங்கிக் கொள்ள சமூக உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே இறைவா!***

*எமது சமூகத்திற்காக உம்மிடம் இரந்து வருகின்றோம். இன்றைய நாட்களில் சமூக உறவுக்கும், ஒற்றுமைக்கும், மகிழ்ச்சிக்கும் தடையாக இருக்கும் அனைத்துத் தீமைகளையும் உமது இரக்கத்தால் தகர்த்தெறிந்து நாம் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே மனமும் உடையவர்களாச் செயற்பட்டு இறையரசின் கருவிகளாகவும், சமாதானத்தின் தூதுவர்களாகவும், உமது சாட்சிகளாகவும் செயற்பட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***வாழ்வை வெற்றியாக்கும் விண்ணகத் தந்தையே!***

*தொற்றுநோயின் தாக்கம் குறைந்து, கல்விமனைகள் திறக்கப்படவும், எங்கள் பிள்ளைகள் மீண்டும் தங்கள் பள்ளி பருவத்தை முழுமையாக அனுபவித்து, கல்வியிலும் பிறர் அன்பிலும், இறை நம்பிக்கையிலும் சிறந்து விளங்கத் தேவையான ஞானத்தையும், மன உறுதியையும் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***அன்புத் தந்தையே இறைவா!***

*உமது அன்பையும், இரக்கத்தையும் பெற்று மகிழும் எம் இளைஞர்கள் உமது வார்த்தைக்கு மட்டுமே என்றும் பணிந்து உமது சாட்சிகளாய் வாழ அவர்களுக்கு அருள் தந்து அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***உமக்காகக் காத்திருப்போர்க்கு அமைதி அளிக்கும் இறைவா!***

*உம் திருஅவை இன்று சந்திக்கும் சவால்களையும், கொடுமைகளையும், அதற்கு ஏற்படும் அவபெயர்களிலிருந்தும் காத்தருளும். பொறுமையும், அமைதியும் இறுதியில் வெற்றிப் பெறும் என்ற திடமான நம்பிக்கையை எங்கள் உள்ளங்களில் நிலைபெற, உமது ஞானத்தையும் ஆசீரையும் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்..*

***துன்பங்களை நீக்குபவராம் இறைவா,***

*உலகெங்கும் நீதிக்காகவும், அமைதிக்காகவும் ஏங்கும் உமது மக்களின் துன்பங்களை நீக்கி, அவர்கள் விரும்பும் நீதியும், அமைதியும் நிறைந்த உலகை உருவாக்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

www.tamilcatholicnews.com